செ. கு. எண்:209 நாள் :07.03.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 7.8.2013

திருவள்ளூர் மாவட்டம், பட்டரைபெரும்புதூர் ‘‘பி’’ கிராமம், குசஸ்தலை ஆற்றின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் பொருட்டு, 13.7.2013 அன்று ஆற்றில் தூண் அமைக்க பள்ளம் தோண்டும் பணியை மேற்கொண்டிருந்த போது, மண் சரிந்து விழுந்ததில் மேற்கு வங்க மாநிலம், மோல்டா மாவட்டம், முனவர்பூர் கிராமத்தைச் சேர்ந்த சுபோல்மண்டல் என்பவர் உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

காஞ்சிபுரம் மாவட்டம், ஆலந்தூர் வட்டம், ஆதம்பாக்கம் கிராமம் அருகே 16.7.2013 அன்று துரித ரயில் போக்குவரத்து திட்ட (Mass Rapid Transit System) பணியில் ஈடுபட்டிருந்த ஜார்கண்ட் மாநிலம், சாகிப்காஞ்ச் மாவட்டம், அம்தாண்டா பாகார்ட் கிராமத்தைச் சேர்ந்த திரு. பீமா பகாடியா என்பவர் பணி முடிந்து, இரும்பு படிகட்டு வழியாக இறங்கும் போது, தவறி விழுந்ததில் பலத்த காயமடைந்து மருத்துவமனைக்குச் செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகுந்த துயரமடைந்தேன்.

இந்த விபத்துகளில் அகால மரணமடைந்த சுபோல்மண்டல் மற்றும் பீமா பகாடியா ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவங்களில் உயிரிழந்த சுபோல்மண்டல் மற்றும் பீமா பகாடியா ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:

இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9